DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No.86/2020**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW9 | Caste | : | |
| Name | : | முத்துபிரேம்சந்த் | Age | : | 52 |
| F/N | : | முத்து | Occupation | : | காவல் ஆய்வாளர், தெற்குவாசல் காவல் நிலையம் |
| Village | : | | | | |
| District | : | மதுரை | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 14th day of March 2024.

**14.03.2024**

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது மதுரை மாநகரம் தெற்கு வாசல் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 31.08.2019 ம் தேதி நான் உச்சிப்புளி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது உச்சிப்புளி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திரு. நந்தகுமார் என்பவர் அதிகாலை 00.30 மணிக்கு உச்சிப்புளி காவல் நிலைய குற்ற எண்.312/2019, பிரிவுகள் 279, 304 A இதச ஆக வழக்கு பதிவு செய்தார். அந்த வழக்கு கோப்பை எனது பார்வைக்கு அன்றைய தினம் அதிகாலை 01.30 மணிக்கு சமர்ப்பித்தார். இரவு நேரம் என்பதால் சம்பவயிடத்திற்கு அருகில் தங்கியிருந்து அன்றைய தினமே காலை 06.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் சந்திரன் மற்றும் ஜோதிபாசு ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். (**மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

2. பின்னர் சாட்சிகள் சந்திரன் மற்றும் ஜோதி பாசு ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் சாட்சிகள் சந்திரன், முனியசாமி, தினகரன், கோட்டைராஜீ, சிவராமகிருஷ்ணன், ஆனந்தகுமார், பூ பாண்டி, கோபி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் அன்றைய தினம் காலை 08.30 மணிக்கு இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்று இறந்த நபரான வனிதா என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை செய்தேன். **(பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் காலை 10.00 மணிக்கு பிண கூராய்வு செய்ய காவலர் திருமதி.ஹேமலதா என்பவர் மூலம் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு வேண்டுகோள் கடிதம்

கொடுத்து அனுப்பினேன்.

3. பின்னர் அன்றைய தினம் காலை 10.00 மணிக்கு இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் வைத்து இறந்த நபரான ராஜேஸ்கண்ணன் என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை செய்தேன். **(பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் காலை 11.30 மணிக்கு பிண கூராய்வு செய்ய காவலர் திரு.கோவிந்தன் என்பவர் மூலம் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பினேன். மேற்படி இறந்த நபர்களின் உடல்களை நல்லடக்கம் செய்ய உறவினர்களிடம் ஒப்படைத்தேன். அதன் பின்னர் 02.09.2019 ம் தேதி மதியம் 13.00 மணிக்கு ஆஜர் எதிரியை உச்சிப்புளி காவல் நிலையத்தில் வைத்து கைது செய்து நிலைய பிணையில் விடுவித்தேன். பின்னர் இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட TN 06 T 3994 என்ற பதிவு எண் கொண்ட Renault Nissan நான்கு சக்கர வாகனத்தையும், TN 65 Q 1013 என்ற பதிவெண் கொண்ட TVS XL இரு சக்கர வாகனத்தையும் மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வுக்கு அனுப்பி வைத்தேன்.

4. அதன் பின்னர் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.இளங்கோ அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து ஆய்வறிக்கைகளை பெற்றேன். **(மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் அ.சா.ஆ.7 மற்றும் அ.சா.ஆ.8 ஆக முறையே குறியீடு செய்யப்படுகிறது).** இறந்த நபர்களின் பிரேதத்தின் மீது பிண கூராய்வு செய்த மருத்துவர் திருமதி. பாத்திமா பைத்துல்ராணி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அறிக்கைகள் பெற்றேன். **(பிண கூராய்வு அறிக்கைகள் அ.சா.ஆ.9 மற்றும் அ.சா.ஆ.10 ஆக முறையே குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் பிரேத விசாரணைக்கு உதவியாக இருந்த காவலர்கள் திருமதி. ஹேமலதா மற்றும் திரு.கோவிந்தன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் திரு.நந்தகுமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கு விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

(குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை)

**மறு விசாரணை :** இல்லை

**(ஒப்பம்/-க.பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**இராமநாதபுரம்.**